# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பதவி தொடர்பாக சிறந்த அனுபவமும் தேவையான தகைமைகளையும் கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

## 1. பதவி : பணிப்பாளர் (நிர்வாகம்)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை** : 01

**சேவை வகுதி** : சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் - (HM 1-1)

**சம்பள அளவுத்திட்டம்** : ரூபா 140,640/-, 15x4,100/= ரூபா 202,140/- HM 1-1 2025) (மாதாந்தம்) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்

**அடிப்படை சம்பள நிலை** : ரூபா 105,399.00 (01/2025ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபத்தின் 11ஆம் அட்டவணையின் பிரகாரம்)

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

***வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது :***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம்/ சட்டம் ஆகிய துறைகளில் ஆரம்பப் பட்டத்துடன் தொடர்புடைய துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

அரசாங்கம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது பதினைந்து (15) வருடகாலத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

***உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது***

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 1ஆம் தரத்தில் முகாமைத்துவ மட்டத்தில் (MM 1-1) தொடர்புடைய துறையில் 05 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை முடிவுறுத்தப்படும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். அரசாங்கத் திணைக்களம் / மாகாண அரசாங்கம் / அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சபைகள் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

தெரிவு செய்யும் முறைமை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

**அனுகூலங்கள்:**

1. 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க சட்டத்தின் கீழான பணிக்கொடை.
2. அலுவலர்களுக்கான மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் / ஊழியர் நட்டஈட்டு காப்புறுதித் திட்டம்
3. ஊழியர் சேமலாப நிதியம் - ஊழியர் 10%, தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய மேலதிக அனுகூலங்கள்.
5. போக்குவரத்து வசதிகள் மற்றும் இயைபுடைய மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு அல்லது மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு 50,000.00 ரூபா மற்றும் இயைபுடைய எரிபொருள் கொடுப்பனவு இந்தப் பதவிக்கு ஏற்புடையது. (1/2015 மற்றும் 1/2015(1)ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கைகளின் பிரகாரம்)

**ஏனையவை:**

i. இலங்கை பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. மிகச் சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் தற்போதைய தொழில், சம்பள விபரங்கள், காலப்பகுதியுடனான முன்னைய பதவிகள் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் விண்ணப்பதாரியின் ஏனைய அனைத்து விபரங்கள் அத்துடன் பிறப்புத்சான்றிதழ், கல்விசார், தொழில்சார் மற்றும் சேவை சான்றிதழ்கள் 2025.06.20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள்/ மாகாண அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தரமாக ஏற்கனவே இருப்பவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அதிகாரசபையின் உரித்தான பிரிவு தலைமைகளூடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

முடிவுறுத்தப்படும் திகதிக்கு பின்னர் பெறறுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது திணைக்களங்களின் / நிறுவனங்களின் தலைமையூடாக அனுப்பப்படாதவைகள் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரமானது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் **www.cda.gov.lk** என்ற இணையதளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல.: 54, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**